# <u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.</u>

முன்னிலை : **செல்வி. N. திலகேஸ்வரி, B.Sc., LL.M.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2023-ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 17-ஆம் நாள், வெள்ளிக்கிழமை

**I.A. No. 2 of 2022 in O.S. No. 108 of 2004**
**(CNR No. TNSA13-000062-2004)**

கருப்பண்ணன் கவுண்டர் .. மனுதாரர் / பிரதிவாதி

எதிராக

1. பெருமாள் (காலமாகிவிட்டார்)
2. பெரியம்மாள்
3. செல்லம்மாள்
4. பவுனு
5. மணிகண்டன் .. எதிர்மனுதாரர்கள் / வாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 05.10.2023-ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R. சங்கர் அவர்கள் ஆஜராகியும், 1-ம் எதிர்மனுதாரர் காலமாகிவிட்ட நிலையில், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. ரவீந்திரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## <u>உத்தரவுரை</u>

மனுதாரர் / பிரதிவாதி தாங்கள் ஒப்புக்கொண்டுள்ள ஆவணங்களில் உள்ள கையெழுத்துக்களை 15.12.1999 தேதியிட்ட அடமான பத்திரத்திலுள்ள கைரேகை

மற்றும் கை எழுத்துடன் ஒப்பீடு செய்வதற்காக கை எழுத்து நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெற வேண்டி தாக்கல் செய்துள்ளனர்.

2. **<u>மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>** மனதாரர் / பிரதிவாதி தன்னுடைய மனுவில் 13.09.2002 தேதியிட்ட கிரய ஒப்பந்தத்தின் மனுதாரர் கையொப்பம் இடவில்லை என்றும் அந்த கிரய ஒப்பந்தத்தை தான் ஏற்ப்படுத்தவில்லை என்றம் அது வழக்கிற்காக மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ள ஆவணம் என்றும் எனவே அது மோசடியான ஆவணம் என்பதை நிரூபிப்பதற்காக கை எழுத்து நிபுணரின் அறிக்கை பெற வேண்டியது அவசியம் என்றும் தான் ஏற்கனவே இதற்காக இ.ம.எண்.127/16- ஐ தாக்கல் செய்து 14.04.2021 தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாகவும் வழக்கு பிரச்சனை சம்மந்தமாக பல வழக்குகள் எழுவதை தடை செய்ய வேண்டி இம்மனுவை தாக்கல் செய்திருப்பதாகவும் மனு அனுமதிக்கப்பட வேண்டுமென்று கூறியுள்ளார்.

3. **<u>5-ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2 முதல் 4 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>** எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தங்களுடைய எதிருரையில், மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றும் மனுதாரர் / பிரதிவாதி தன்னுடைய பதிலுரையில் 13.09.2002 தேதியிட்ட கிரய ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொடுத்ததை ஒப்புக் கொண்டிருப்பதாகவும் ஆனால் கிரய ஒப்பந்தமாக ஏற்படுத்தாமல் அடமானத்திற்கு மட்டும் எற்படுத்தி கொடுத்ததாகத்தான் கூறியிருப்பதாகவும் எனவே அதற்கு முரணாக தற்போது அதிலுள்ள மனுதாரரின் கை எழுத்தையும் கை ரேகையையும் ஆட்சேபனை செய்து இம்மனுவை தாக்கல் செய்ய இயலாது என்றும் மேலும் அந்த கிரய ஒப்பந்த பத்திரத்திற்காக பெறப்பட்ட முத்திரைத்தாளை விற்பனை செய்த நபரான S. சங்கீதா முத்திரைத்தாள் விற்பனையாளர் இல்லையென்று மாவட்ட பதிவாளர் அவர்களிடமிருந்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாங்கள் தகவல் பெற்றிருப்பதாகவும் எனவே அந்த மோசடி ஆவணத்தை கை எழுத்து நிபுணருக்கு அனுப்ப வேண்டியது அவசியம்

***.. 3 ...***

இல்லையென்றும் மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் ஏற்கனவே தாக்கல் செய்த இ.ம.எண்.127/2016 ஆனது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில் மீண்டும் அதே பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றம் கூறியுள்ளனர்.

4. இரு தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. மனுதாரர் / பிரதிவாதி 13.09.2002 தேதியன்று கிரய ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்று மனுவில் கூறியுள்ளார். ஆனால் அவரே தன்னுடைய பதிலுரையில் 13.9.2002 தேதியன்று தான் கிரய ஒப்பந்த பத்திரத்தை வாதிக்கு ஏற்படுத்தி கொடுத்தது உண்மைதான என்றும் ஆனால் சொத்தை விற்பதற்கு ஏற்படுத்தி கொடுக்கவில்லை என்றும் அடமானத்திற்காக மட்டும் தான் ஏற்படுத்திக் கொடுத்ததாகவும் கூறியுள்ளர். தன்னுடைய பதிலுரை சங்கதிகளுக்கு முரணாக மனுதாரர் தற்போது 13.9.2002 தேதியிட்ட கிரய ஒப்பந்த பத்திரத்திலுள்ள கையொப்பமும், கைரேகையும் தன்னுடையது அல்ல என்று கூறியிருப்பது ஏற்க இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. ஏற்கனவே தன்னுடைய பதிலுரையில் மனுதாரர் / பிரதிவாதி ஒப்புக்கொண்ட ஒரு ஆவணத்தை தற்போது மோசடியானது என்று கூற இயலாது. ஏற்கனவே பதிலுரையில் மனுதாரர் / பிரதிவாதி 13.9.2002 தேதியிட்ட கிரய ஒப்பந்தத்தை ஏற்படுத்தி கொடுத்ததை ஒப்புக்கொண்டதால் கை எழுத்து நிபுணருக்கு இந்த ஆவணத்தை அனுப்ப வேண்டியது அவசியம் இல்லை என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் எ.மா.சா.ஆ.1 மற்றும் 3 வரையிலான ஆவணங்களை பரிசீலனை செய்ததில் 01.07.1994 தேதியிட்ட கிரய ஒப்பந்தத்தை ஏற்படுத்த பெறப்பட்ட முத்திரைத்தாள் விற்பனையாளர் இல்லை என்பது தெரியவருகிறது . எனவே மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 01.07.1999 தேதியிட்ட பதிவு செய்யப்படாத கிரய ஒப்பந்த பத்திரமே உண்மையானதா என்பது குறித்து சந்தேகம் எழுகிறது. எனவே அந்த ஆவணத்தையும் 13.9.2002 தேதியிட்ட கிரய ஒப்பந்த ஆவணத்தையும் கை எழுத்து நிபுணருக்கு ஒப்பீடு செய்வதற்காக அனுப்புமாறு மனுதாரர் / பிரதிவாதி குறியிருப்பதை ஏற்க இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மனுதாரர் / பிரதிவாதி ஏற்கனவே இ.ம.எண்.

127/2016 மனுவினை இதே பரிகாரத்திற்காக தாக்கல் செய்து அது 16.04.2021 தேதியன்று இந்நீதிமன்றத்தால் மனுதாரர் / பிரதிவாதியால் அம்மனுவின் எதிர்மனுதாரர் / வாதி இறந்து போன பிறகு அவருடைய வாரிசுகளை மனுவில் சேர்க்காத காரணத்திற்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. எனவே மீண்டும் அதே பரிகாரத்திற்காக மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்திருப்பது ஏற்க இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவுடன் மனுதாரர் தன்னுடைய கையெழுத்து மற்றும் கைரேகை கொண்டு ஒப்புக்கொள்ளப்பட்ட ஆவணமாக கூறியிருக்கும் 01.07.1999 தேதியிட்ட ஆவணத்தின் உண்மைத் தன்மை குறித்தும் எதிர்மனுதாரர்கள் / வாதிகள் சந்தேகம் எழுப்பியிருப்பதாலும் ஏற்கனவே மனுதாரர் / பிரதிவாதி 13.09.2002 தேதியிட்ட ஒப்பந்த பத்திரத்தை ஏற்படுத்தி கொடுத்ததை ஒப்புக்கொண்டு இருப்பதாலும் இம்மனுவை அனுமதிக்க இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது . மனுதாரர் / பிரதிவாதி தன்னுடைய பதிலுரையில் 13.09.2002 தேதியிட்ட கிரய ஒப்பந்த பத்திரத்தில் கண்டுள்ள தன்னுடைய கை எழுத்து மற்றும் கைரேகை குறித்து எவ்வித ஆட்சேபனை எழுப்பாமல் தற்போது வழக்கு தாக்கல் செய்து 10 ஆண்டுகள் கழித்து இம்மனுவை தாக்கல் செய்திருப்பது வழக்கை காலதாமதப்படுத்த வேண்டியே என்று கருதி இந்நீதிமன்றம் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

6. இறுதியாக, மனுதாரர் / பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2023-ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 17-ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**(Sd/- N. திலகேஸ்வரி)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

ஆத்தூர்.

<u>மனுதாரர் / பிரதிவாதி  தரப்பு சாட்சிகள் :</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சாட்சிகள் :</u> இல்லை

<u>மனுதாரர் / பிரதிவாதி  தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u>

| | |
|---|---|
| எ.ம.சா.ஆ- 1 | 5-ம் எதிர்மனுதாரர் தரப்பில் விணப்பிக்கப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் - 2005-க்கான படிவம் - ஏ. |
| எ.ம.சா.ஆ- 2 | பொது தகவல் அலுவலர் / மாவட்ட பதிவாளர் (நிருவாகம்) அவர்களால் 5-ம் எதிர்மனுதாரருக்கு 11.01.2023 தேதியிட்டு அனுப்பப்பட்ட கடிதம் |
| எ.ம.சா.ஆ- 3 | அஞ்சலக ஒப்புதல் அட்டை |

<u>நீதிமன்ற சாட்சிகள் </u>: இல்லை

<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u> : இல்லை

**(Sd/- N. திலகேஸ்வரி)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

ஆத்தூர்.

**<u>கூ.மா.உ.நீ., ஆத்தூர்.</u>**

**இ.ம.வ. எண் 2/2022**

----------------

**அ.வ. எண் 108/2004**

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 17.11.2023